Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

Advertising charges per line 10
do per half col Rs 3 00
do per Column 5 00

# THE Hindu Organ

VOL 6. ௬-ம்புத்தகம். | JAFFNA. WEDNESDAY MAY 8, 1895 | இந்துசாதனம். | கலியுகம் ௪௯௯௬ மன்மத ௵ ௧௮௯௫, மேஷ ௨௬, | NO 19. இலக் ௧௯.

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசரிக்கப்படும்.

## ACKNOWLEDGMENT

The Manager of the Hindu Organ begs to acknowedge with thanks the receipt of the following remitlances from subscribers:—

Messrs.

| | | |
|---|---|---|
| V. Arunachalam | (Velanai) | .64 |
| S. Somachundra Ayer | (Kockuvil) | 1-00 |
| K. Muttukumaru | (Jugra) | 2-25 |
| S. Thambyah | (Colombo) | 2-00 |
| A. KrishnaPillai | (P. W. D. Jaffna) | 3-00 |
| V. Vairamuttoo | (Police Station Jaffna) | 3-00 |

## NOTICE.

IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction Class I } No 657.

In the Matter of the Estate of the late Kathiravalu Chapapathi of Vannarpannai West.

Deceased.

Chellamuttu widow of Katheravalu Chapapathi of Vannarpannai West.

Petitioner

Katheravalu Murukesu of Hatton in Kandy.

Respondent.

This matter of the Petition of Chellamuttu widow of Kathiravelu Chapapathi of Vannarpannai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kathiravelu Chapapathi coming on for disposal before H. Nevill Esquire, District Judge, on the 9th day of April 1895 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 8th day of April 1895 having been read, it is declared that the Petitioner is the widow of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to her unless the Respondent or any other person shall on or, before the 22nd day of May 1895 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 9th day of April 1895.

Sigd H. Nevill
District Judge.

## STATONERY.

| | | Rs Cts |
|---|---|---|
| Printing Paper Highly glazed | 16 lbs | 4/50 |
| do do | 14 lbs. | 4/00 |
| Foolscap Dorling Parchment for Notaries | | Rm. 10/00 |
| Foolscap Best quality | 10 lbs. | 2/87½ |
| ,, do | 12 lbs. | 3/50 |
| ,, inferior | | 2/75 |
| Note Paper cream laid sparrow Pkt. | | /50 |

VERY FINE LAVANDER.

Perfume for the season each bottle... Rs.1-00

The Richest Cologne Water in wickered bottle Rs.3 each

## CLOCKS! CLOCKS!

| | |
|---|---|
| A Regulator Drop Octagon 30 inches high 8 day striking ½ hour striking | Rs 27 |
| Office Regulator, do cathedral Gong | 35 |
| Eight days steel clock do | 30 |

These clocks are Guarranteed for 40 years.

Ward and Davy.

கணைக்காய்ச்சல்.

இக்கோயுள்ள பிள்ளைகள் எவ்விதவுணவுகளைக் கொடுத்து வளர்த்தாலும் அக்கோயால் மெலிந்து சோம்பி களைடைவில் தாப்பெலமடைந்துகொண்டே வருவார்கள். அந்த கோவை ஒரு மாசத்துக்குள் நிவிர்த்திபண்ணிப் பிள்ளைகளை கல்விரத்தக் கட்டோடு சுறுசுறுப்புள்ளவர்களையும் படிப்பில் முயற்சியுள்ளவர்களையும் திருத்தத்தக்க மருந்து எங்களிடம் விலைக்கு வந்திருக்கிறது. அநேக பிள்ளைகளுக்கு இங்கே கொடுத்துக் கைகண்ட பலனுகவுமிருக்கிறது. விலை. சீசா க-க்கு ரூபாய். க,

வாட் அண்டு டேவி. காவலர்வீடு.

## WANTED.

A Clerk who writes a legible hand with a knowledge of Mercantile business. Salary Rs. 15/, per mensem. Security Rs. 500 in cash or Landed property.

Apply to

8/5-95 WARD & DAVY JAFFNA.

# THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY MAY 8, 1895.

## RAILWAY EXTENSION TO THE NORTH.

We have great pleasure in giving publicity to the following Resolution passed by the "Ceylon Union" established in Perak, and forwarded officially to the Secretary of the Jaffna Railway Committee, in regard to the expediency and necessity of Railway extension to Jaffna. It shows that the Ceylonese in the Straits Settlements take a deep interest in the development and advancement of their native country and are ready to help us with their subscriptions, if they are needed, to further carry on the agitation for the extension of the Railway. We have no doubt that this Resolution will be an incentive to sustained exertions on the part of the Jaffna Railway Committee; and this body will not rest, we hope, till sanction is obtained for the commencement of this great work. The Resolution of the Ceylon Union, passsed on the 17th ultimo with Mr. W. A. Rogers in the Chair is as follows:—

"That the Ceylon Union established in Perak and having among its members men who have travelled in Ceylon, India, and the Straits Settlements, and who have thereby doubtless seen the numerous advantages accruing to a country by Railway communication is emphatically of opinion that the opening up of North Ceylon in this manner to be in constant direct communication with the Metropolis, is a matter of distinct necessity to advance the progress of the people of the North, who at present, if not for some time past, are almost at a standstill.

"The Ceylon Union rejoices to see the names of such able and talented men in the Jaffna Railway Committee who doubtless will continue to agitate in the matter till the object in view is accomplished. and this Union pledges itself to use its efforts should it be necessary to raise a local subscription to defray in part the expenses of a deputation to wait on His Excellency the Governor of Ceylon in the event of the Jaffna Railway Committee arriving at a conclusion that such steps would be necessary to fully represent to His Excellency the various advantages of this project."

Since the alone was in type we have received the following copy of the reply of Government acknowledging the receipt of the Memorial of the Jaffna Railway Committee:—

"Colonial Secretarys Office
Colombo; 2nd May 1895

Sir,

I am directed by the Governor to acknowledge thereceipt of your letter dated 23rd April addressed to the Private Secretary to His Excellency and to state that the Memorial forwarded therewith will receive the attentive consideration of the Government and that the Memorialists may rest assured that their interest will not be lost sight of so far as may be consistent with other claims on the Government.

I am &c
Signed H L Crawford
for Colonial Secretary

C, Strantenbergh Esqr,
Honorary Secretary
Jaffna Railway Committee,"

## THE ENTRANCE EXAMINATION OF THE CALCUTTA UNIVERSITY.

It will be seen from the result of this Examination published elsewhere that 52 students have come off successful in it in the whole of Ceylon, of whom 19 are from the Jaffna College. Batticotta; 10 from the Hindu High School, Vannarponnai; and 1 from St. John's College, Chundicully. The three Schools from which a large number of boys have passed the Examination are the Jaffna College, the Trinity College and the Hindu High School. The result is highly creditable to the Hindu High School, which though in the fifth year of its existence, has attained to such a high and eminent position among the educational institutions of the Island as to present 16 students for the Entrance Examination of the Calcutta University, of whom 2 have passed in the first class, 4 in the second, and 4 in the third class. It is worthy of remark that all the 4 students who were presented for the same Examination from the Vannarponnai English School under the Wesleyan Mission have failed. As regards the percentage of passes to the number presented, the Hindu High School has the the highest among the Jaffna schools, being 63 per,cent, while that of the Jaffna College is only 40. percent.

## LOCAL AND GENERAL.

The Weather—The South-West Monsoon has finally set in; and the wind blows hard in these days

The Ports of Jaffna and the Import of Paddy—A large number of native vessels from India and Burmah are now landing paddy at the ports of Kaits, Kangesanturai, Valvettiturai and Point Pedro. The price of food grains has not, however yet gone down. Kaits is the port which has during the North East Monsoon been much used by the Chetties in landing their rice and paddy,as they were afraid to bring their ships to Kangasanturai before the South-West Monsoon had finally set in.This precautionary measure they were led to adopt in view of the great loss they sustained in April last year on account of the storm that suddenly broke out and wrecked five vessels with paddy at Kangasanturai. Now that the weather has settled and the Monsoon set in, Kangasanturai has from this week become, as it usually is during this season, the busiest and the most important port in this Province. The Chetties bitterly complain that by the Customs authorities at Kaits requiring importers to pay the import duty at that port, instead of, as was th practice till very recently, in the Jaffna Customs, they have been put to great inconvenience and additional expenses. They have, we understand, memorialized the Principal Collector of Customs to revert to the old practice; and we earnestly hope that Mr. Lee who is well acquainted with the ports and affairs of this District will grant their prayer. The Government will not gain anything by unnecessarily causing loss and trouble to the merchants.

Post Office—The Postmaster, Mr. Silva, who was suffering from an attack of fever, having

உ

கணபதி துணை.

வாழ்கவந்தணர்வானவரானினம்........................
வீழ்கதண்புனல் வேந்தனு மோங்குக..................
ஆழ்கதீயதெல்லாமரனாமமே..........................
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே..........................

## விளம்பரம்

௧௮௯௫-ம் ௵ ஆனி ௴ ௨௯ வ வண்ணார்பண்ணை ... அ. முத்துக்கணபதிச்செட்டியாருக்கு அ. ... முகதாவில் உடனுடம் இலக்கத்தில் ஒரு ... அற்றே ணித்தந்து ... நீக்கிப்போட்டேனென்பதைச் சகலருக்குமறிவிக்கின்றேன்.

5/5/95/ வண்ணைமேற்கு. } கு. சபாபதிச்செட்டியார்.

---

### விளம்பரம்.

வண்ணார்பண்ணைகுடி முகமது முதாறுசேகு அப்துல்காதறுவும் நானும் மு. சே. விலாசத்திலே வியாபாரம் நடத்திக்கொண்டு வந்திருந்ததை ௧௮௯௫ ௵ வைகாசி ௴ ௨௨ உ அ. சீதாத்தினம் நொத்தாரிஸ்முகதாவில் ௨௨௦௯ ம் இலக்கத்தில் எழுதின செற்றின்மென் றாறதியால் பிரிவுசெய்து பண்ணிக்கொண்டபடியால் முகமது முதாறுசேகு அப்துல்காதறுவுடன் பற்றுவரவு பண்ணுகிறவர்களுக்கு நான் பாத்தியஸ்தனல்லவென்பதை இதனால் சகலருக்குமறிவிக்கிறேன்.

௧௮௯௫ ம் ௵ சித்திரை ௴ ௩௦ உ { மு. சுலைத்தான்லெக்கந்தர் அல்லது மாணிக்கம்.

---

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் ... ௵ சித்திரை ௴ ௨௯ உ

## கழுகுமலைக் கலகம்.

திருநெல்வேலிச்சில்லாவிலே, கோவிற்பட்டி என்னுமூருக்கு ௧௨ மைல் தூரத்திலே கழுகுமலையென்றொரு கிராமமிருக்கின்றது. இக்கிராமம் எட்டையாபுரம் சமஸ்தானத்தைச்சார்ந்தது. இங்கே கலியுக வரதராகிய சுப்பிரமணியக்கடவுளுக்கு ஓராலயமுண்டு. இவ்வாலயம் ஷை கடவுளின் குன்றுந்தோருடல்களுள் ஒன்று. இவ்வாலயத்துக்கு ௵ ௧ க்கு ௨௫௦௦ ரூபாவுக்குக் குறையாதவரும்படியுண்டு. இங்கே தைப்பூசத்திருவிழாவும், பங்குனிமாசத்து உத்தரநாளில் ரதோற்சவம் நடக்குமாறு மகோற்சவமும் வருடந்தோறுந் தப்பாது நடந்துவருவது பண்டைக்காட்டொட்ட வழக்கமே. அவ்வழக்கப்படி சென்ற பங்குனிமாசத்திலேயும் மகோற்சவந்தொடங்கி நடந்துவந்தது. இதற்கு இடையூறுசெய்யவேண்டுமென்னும் கெட்டநோக்கத்தோடு அவ்வூரிலுள்ள நூற்றுச்சொச்ச வீட்டினர்களாகிய கத்தோலிக்குக்கிறிஸ்தவசாணர், எம்பெருமானார் ஆலயத்திருவீதியின் பக்கத்தில் சிலமாசங்களுக்குமுன்னர் ஒரு கிறிஸ்த ஆலயத்தைக் கட்டிவிட்டார்கள். அவ்விடத்திலே அக்கட்டடம் கட்டக்கூடாதென்றும் அதை இடித்துவிடவேண்டுமென்றும் கோட்டுமூலமாக வழக்குநடந்துவருகின்றது. அதுமுடிவாதற்குமுன்னே, அவர்கள், தம் ஆலயத்துக்குஎதிரேஎம்பெருமானார் தேரோடும்வீதியிலேதேரோடாவண்ணம் ஒரு பந்தலையிட்டார்கள். ரதோற்சவதினமாகிய பங்குனி உத்தரத்தன்று காலை அறு மணிக்குச் சுப்பிரமணியப்பெருமானை ரதமேற்றி வடம்பிடித்திழுத்துமேற்கூறிய பந்தருக்குச் சமீபத்தில்வரவே, ரதம் தங்கள்பந்தரில் தாக்குமென அறிந்திருந்தவர்களானதாலும், கலகம் விளைக்கவேண்டுமென்னும் விருப்பத்தோடு ஆயத்தமாயிருந்தவர்களானதாலும், ரதமிழுப்பதைத்தடுப்பதற்காகச் சனக்கூட்டத்தில் கன்மாரிபொழிந்தார்கள். அதுசகிக்காத சைவர்கள் கலகத்துக்கெழ, ரதோற்சவத்தை நடாத்திவைக்க அங்குவந்திருந்த மிகுந்த விவேகியும், சற்குணரும், அதி சாமார்த்தியமுடையவருமாகிய எட்டையாபுரம் தற்கால மைனர் ஜமீன்மானேசராகவிருக்கும் (டிப்டிகலெக்டர்) ம. ா. ா. ஸ்ரீ. வெங்கிட்டராவ் அவர்கள் கலகமின்றிக் காரியத்தை முடிக்கக்கருதி, இச்சனங்களை யமர்த்தி, கிறிஸ்தவர்கள் சமூகமடைந்து நல்வார்த்தைபேசி, பந்தரைப்பிடுங்கி ரதஞ்செல்றவுடன் முன்னிருந்தபடியே பந்தரைப் போட்டுத்தரலாமென்று இரந்துகேட்டும், கிறிஸ்தவர்கேளாது கலகம்விளைக்கத்தொடங்கினார்கள். அதுகண்டு மானேசரவர்கள் சனங்களுக்குள் கலகம் நடவாதிருக்குமாறும், கிறிஸ்தவரோடு எதிர்செய்யாமலும் சமாதானமாக்கக் கூடியவழிவகைகள் எவையென ஆலோசித்து நிற்குஞ்சமயத்து அக்கிறிஸ்தவருளொருபாதகன் வெங்கிட்டராவவர்களின் வயிற்றில் கத்தியால்வெட்டிக்குடலைச்சாய்த்துவிட்டான். அதனால் சற்றுநேரத்தி லவருயிர் பரலோகஞ்சேர்ந்தது. அதுமட்டோ, அவரை ஆதரிக்கவந்த அவர் குமஸ்தாவின் புயத்தையும் வெட்டிச்சாய்த்தார்கள். அதுமட்டோ, அவர்பக்கத்தேநின்ற துரைச்சாமிபுரத்துக் கிராமமுனிசிப்பு ஆழ்வார்சாமி நாயக்கரையும் வயிற்றில்வெட்டிச்சாய்த்துவிட்டார்கள். அவர்மறுநாட்காலை எட்டுமணியளவில் சுவர்க்கலோகஞ்சேர்ந்தார். இன்னுஞ்சிலரைக்காயப்படுத்தியும் விட்டார்கள். இவ்வாறு நடந்துகொண்டிருப்பதைக்கண்ட சைவர்களொருங்குகூடிச் சாணரைக்கும்பலைக்கலைக்க அவர்கள் ஓடித் தங்கள் ஆலயத்துட் புகுந்து கதவுகளுக்குத்தாளிட்டுப் பதுங்கியதோடு தங்கோயிலுக்கு முன்னிருந்த பந்தரிலே தீயிட்டார்கள். தீயிட்டதைநோக்குமிடத்துப் பந்தர்த்தீயினால் ரதமும் பற்றிக்கொள்ள அதனால் சைவர்கள் தேர்மீது பராக்காயிருக்கத் தாங்கள் ஓடித்தப்பிவிடலாமென்றெண்ணிச் செய்தார்களென்றெண்ணற்கிடமாகின்றது. அப்பந்தரிலிட்ட தீ தேரிலேதாவாது இட்டவர்களாகிய சாணர்பதுங்கியிருந்த ஆலயத்திலே தாவியது. அதனாற் கத்தோலிக்க ஆலயமும் அதனுள்ளேயிருந்த சாணர்சிலரும் சாம்பராயினர். அதுகண்டசாணர் மீண்டும் கொதித்தெழுந்து சைவர்மீதுசாடச் சைவர்கள் இனிப்பொறுப்பது சரியன்று எனத்துணிந்து திரண்டு சாணரை எதிர்க்கச் சாணர் எதிர்த்து யுத்தஞ்செய்து ஆற்றாதோடித் தத்தங் குடிசைகளிற்பதுங்கினர். அதுகண்டசைவர் அதிக்கிரமித்து அக்குடிசைகளுக்குத் தீயிட்டுக்கொள்ளையிட்டார்கள். இதற்கிடையில் அரசினர் வந்து சாணரைத் தலைவர்களில் ௬௦ பெயரைக் கைப்பற்றி விலங்கிட்டு ஏனையோரையுங் கைப்பற்றத் தேடித்திரிகின்றார்கள். இதுசமயத்து, சென்னைக்குச் சமாசாரமனுப்பப்பட்டு ௬௦௦ போடங்கிய பட்டாளமொன்று அனுப்பப்பட்டிருக்கிறதாம். இக்கலகத்தை யுண்டாக்கவேண்டுமென்று தொடங்கியவன் செல்வச்செருக்குமிகுந்த மாணிக்கநாடான் என்பவனே. இவன் இவ்விதகலகத்தைச்செய்யுமாறு ஒழுங்குகள்செய்துவிட்டு அற்றைத்தினம் தூத்துக்குடி வங்கியில் கையெழுத்துப் போட்டுக்கொள்ளுகிறதற்காகச் சென்றிருந்தான்.

இங்கே உயிர்வதைசெய்த சாணன் "தாங்கள்சொல்லிவிட்டுப்போனபடியே எல்லாஞ்செய்துமுடித்தோம், டிப்டிக்கலெக்டரையுங் குத்திக்கொன்றுபோட்டேன்" என்றுஎழுதித் தூத்துக்குடிக்கு மாணிக்கநாடானுக்கு ஆள்மூலமாகக் கள்ளப்பாதையாகப் போகுமாறு அனுப்பியகடிதத்தை நீதிபதியொருவர் உளவாலறிந்து வழியில் அவனைப்பிடித்துக்கடிதத்தையும் பறித்து அவனையுங்கைதியாக்கிக்கொண்டு உடனேமாணிக்கநாடானைப்பிடிக்கும்படி தந்தியாற்றெரிவித்துப் பிடிப்பித்து விலங்குமாட்டுவித்தார். இனிநிகழுஞ் சங்கதிகளை முறைமுறையாகத் தெரிவிப்பாம்.

---

## கல்கத்தாப்பிரவேசப்பரீக்ஷை.

இப்பரீக்ஷைக்கு யாழ்ப்பாணத்திலே, வட்டுக்கோட்டைக்கல்லூரியிலிருந்தும், சுண்டிக்குளிக் கல்லூரியிலிருந்தும வண்ணைசசெட்டித்தெரு உவெஸ்லியன்மிஷன் ஹைஸ்கூலிலிருந்தும, வண்ணை இந்துஹைஸ்கூலிலிருந்தும் மாணவர்சென்றிருந்தார்கள். அதன்பேறு இவ்வாரத்தில்தெரியவந்தது-

(1) வட்டுக்கோட்டைக் கல்லூரியிலிருந்து பகிரங்கத்தில் ௧௪ மாணவரும், அந்தரங்கத்தில் ஐவருமாக ௧௯ மாணவர்சென்று, முதலாம் வகுப்பிலொருவரும், இரண்டாம்வகுப்பில் அறுவரும், மூன்றாம் வகுப்பில், பதினொருவருமாகப் பதினெண்மர் சித்திபெற்றனர்.

(2) சுண்டிக்குளியிலிருந்து சென்றவர்களுள் இரண்டாம்வகுப்பிலொருவர் சித்திபெற்றார்.

(3) வண்ணை உவெஸ்லியன்மிஷன் ஹைஸ்கூலிலிருந்து சென்றநால்வருள் சித்திபெற்றாரொருவருமில்லை.

(4) வண்ணை இந்துஹைஸ்கூலிலிருந்து சென்ற ௧௬ மாணவருள்.

கொக்குவில்- கா. செல்லையா
சுதுமலை- க. பெருமாள்பிள்ளை என்பவர்கள் முதல்வகுப்பிலும்,
வண்- தலையாளி- க. சபாபதி,
கொக்குவில்- சு. வீரவாகு,
கல்லூர்-- சி. சரவணமுத்து,
பருத்தித்துறை- ச. சுப்பிரமணியம், என்பவர்கள் இரண்டாம் வகுப்பிலும்,
வண்- தலையாளி- பொ. தம்பித்துரை,
ஷை ச. சிதம்பரப்பிள்ளை,
வண்- கந்தர்மடம்- வை. விசுவலிங்கம்,
உடுவில்- அ. இராசையா (Mann) என்பவர்கள் மூன்றாம்வகுப்பிலுமாகப் பத்துப்பேர் சித்திபெற்றார்.

---

## விபரீதஎண்ணம்.

இத்தேசத்திலுள்ள நமது சைவசமயிக ளநேகர், பாதிரிமாரையும, அவர்கள் வித்தியாசாலைகளையும் மிகவிசேடமென வெண்ணித்தங்கள் அருமைப்பாலர்களை அவர்களிடத்தேயனுப்பி நற்கல்வி, நற்பழக்கம், கடவுட்பக்தி முதலியவைகளில்லாமற் செய்து, பெரியோரை மதியாமையாதியாங் குறைவுகளை அவர்களுக்கு உண்டாக்கிவிடுகின்றார்கள். இப்பாலர்களிவர்களுக்குச் செய்தகொடுமைதான் யாதோ. இவ்வருடத்திலே இவ்யாழ்ப்பாணத்திலிந்து கல்கத்தாப்பிரவேச பரீக்ஷைக்கு இந்துஹைஸ்கூல் என்னும் சைவ வித்தியாசாலையிலிருந்தும், நெடுங்காலமெவராலும் விசேடமெனக்கவனிக்கப்பட்டு வந்தபாதிரிமாரது மூன்று வித்தியாசாலைகளிலிருந்தும், மாணவர்சென்றார்களே. பரீக்ஷைக்குச்சென்ற மாணவர்களின் சித்திப்பேறே அவ்வித்தியாசாலைகளின் உயர்வுதாழ்வை நன்குணர்த்தும் இதைமேலேபார்த்து எவரும் நன்குணரலாம்,

இதுமட்டோ, கேம்பிறிட்சுலோக்கல் பரீக்ஷைக்கும் இந்துஹைஸ்கூலிலிருந்தும்பாதிரிமாருடைய ஸ்கூலிலிருந்தும் பிள்ளைகள்சென்றார்களே, அதிலும், இந்துஹைஸ்கூல்மாணவரே முதற்பேற்றைப் பெற்றார்கள். இவ்வாறேமிஷன் வித்தியாசாலைகளிலும் இந்துஹைஸ்கூல் விசேஷகல்வித்தேர்ச்சியையடைந்து வரவும, நமது சைவப்பிரபுக்கள் சற்றுஞ்சிந்தியாது, சைவவித்தியாசாலையில்லாதகாலத்து,உள்ளதையே விசேஷமென எண்ணிக்கொண்டபழையஎண்ணத்தாற்போலும்இன்னும்மதித்துத் தங்கள்பிள்ளைகளை அங்கேஅனுப்பிவருகின்றார்கள். பெருந்தொகைமுதலையுடைய மிஷன்வித்தியாசாலைகள் இவ்வாறே கல்வித்தேர்ச்சியாற்குன்றிவரவும், யாதுபொருளும், உதவியும், பலாதுவிரோதமேயன்றி நண்புமில்லாத சிலசைவாபிமானிகளது முயற்சியால்நடைபெறும் இந்துஹைஸ்கூல் விருத்திபெற்றுவரவும் தங்கள்பாலர்களை இங்கேயனுப்பிச் சாதி, சமய ஆசாரங்களுக் கிடையூறின்றிக் கற்பித்துக்கொள்ளாது விடுவது விவேகமாகுமா.

நம்வண்ணைச் சைவப்பிரபுக்களே, இந்துஹைஸ்கூலை அடியோடுபாறச்செய்யக் கங்கணங்கட்டி அதற்கு வேண்டிய இடைஞ்சல்களைச்செய்தும் அதனினும்விசேடக்கல்விகற்பிக்கின்றேமென்று வாய்ப்பறையறைந்து உங்கள்பிள்ளைகளை அங்குஅழைத்துச்சென்று கற்பிக்கும் வண்ணைச்செட்டித்தெருப் பாதிரிமாரது இங்கிலீசு வித்தியாசாலைக்காரர் தங்கள் வித்தியாசாலையிலிருந்து இம்முறை கல்கத்தாப் பிரவேசப்பரீக்ஷைக்கு நால்வரையனுப்பினார்களே. அவர்களுள் ஒருவராவது சித்திபெற்றாரா! அங்கேகற்பிக்கும உபாத்தியாயர்கள் உயர்ந்தகல்விப்பட்டம்பெற்ற பாதிரிமாரும் சுதேசிகளுமல்லவா? அங்ஙனமாகவும், ஒருவரேனும் சித்திபெறாமைக்குக்காரணம்யாதோ! இதுமட்டோ அரசினரது கிராண்டுபெறும் பரீக்ஷையிலாவது பெரும்பேறடைப்பெற்றார்களா, அதுவுமில்லையே, அதுநிற்க.

சைவப்பிரபுக்களே,

பாதிரிமார் பள்ளிக்கூடங்களிலேதோ விசேடமிருக்கிறதென்று மலைக்காதிருங்கள். அங்குவிசேடமிருந்தாலும் உங்கள்பிள்ளைகளும் உங்கள் மனமுமே அதற்குக்காரணமாகும். ஆதலால் உங்கள்பிள்ளைகளின் சாதி சமய ஆசாரங்களும், கடவுட்பக்தியுங்குன்றாவாறு உங்கள்பிள்ளைகளைச் சைவவித்தியாசாலைகளுக்கேயனுப்பி உலோபமின்றி விதித்தவேதனத்தையும் ஒழுங்காகக்கொடுத்து வருவீர்களாயின் அதுகொண்டு சைவவித்தியாசாலைக்காரர் கல்வியில் வல்ல பலஉபாத்தியாயர்களை நியோகித்து F. A., B. A, M. A. ஆதியாம்பட்டங்கள்பெறத் தகுந்தனவான வித்தியாசாலைகளை நடாத்தி உங்கள்பாலர்களையும் அப்பட்டங்கள் பெறுமாறு கற்பித்துவிடுவார்கள். இதிற்சற்றேனுஞ் சிந்தித்து உங்கள்கடமையைச் செலுத்துவீர்களாக. விபரீத எண்ணம்வேண்டாம்.

---

## தெற்குஅராலிச் "சைவபரிபாலனசபை"

கிறிஸ்தவர்களது உபத்திரவம் சகிக்கலாற்றாத தெற்குஅராலிச் சைவாபிமானிகள் சிலர்சேர்ந்து, சிலகாலமாக அவர்களுபத்திரவத்தை நீக்குமவழியாதென ஆலோசித்து, ஒருசபையும் அதன்கீழ் ஓர்வித்தியாசாலையும ஸ்தாபித்தாலே அவர்களுபத்திரவம் நீங்குமெனத்தேர்ந்து, சென்றபங்குனிமாசத்திலே ஸ்ரீ க. தாமோதரம்பிள்ளை அவர்களை அக்கிராசனராகக்கொண்டு ஷை நாமத்தோடோர் சபையும், "சைவப்பிரகாச வித்தியாசாலை" என்றநாமத்தோடு ஒரு அங்கிலதிராவிட வித்தியாசாலையும் ஸ்தாபித்து, அடிக்கடி சைவப்பிரசங்கங்களும் செய்வித்துவருகின்றார்கள். இவ்வித்தியாசாலைக்குத்தகுந்த உபாத்தியாயராகிய ஸ்ரீ அ. இராமலிங்கப்பிள்ளை என்பவர் சிரேட்டஉபாத்தியாயரானார். இதுதொடங்கிய இச்சிறுதினங்களுள் ௫௦க்கு மேற்பட்ட மாணவர்களையும இரு உபாத்தியாயர்களையுமுடையதாய் விளங்குகின்றது. இன்னுஞ்சிலகாலத்துள் மிகவளர்ந்து சைவசமயவளர்ச்சிக்குப் பேருதவியாகவிருக்கச் சிவபெருமானருள்புரிவாராக.

---

## சீனயப்பானியசமாதானம்.

சென்ற ஒருவருடகாலமாக இவ்விருதேசத்துக்குமிடையே கலகம் நடந்து சீனர் ஆயிரக்கணக்கான சீவர்களையும், பெருந்தொகைப் பொருள்களையும் நாடுகளையும்பறிகொடுத்து சற்றில் ஆற்றாமையால் மிக இரந்து சில உடன்படிக்கைகளோடு சமாதான ஒழுங்குசெய்திருக்கின்றார்கள்.

சமாதான உடன்படிக்கை:—

சீனாவின் கீழ்க்கரையிலுள்ள வர்த்தகவளத்திற்சேற்ற கோரியாதேசத்தைமுன்னிருந்தவாறே இருபகுதியாருக்குமில்லாததன்னிட்டநாடாகவிருக்கவிட்டு லார்ருங்குடநாட்டின் ௪௦ ம் அட்ச பாகைவரையிலுள்ள பல இடங்களும், பர்மோசாதீவும், யுத்தச் செலவுக்காக (௩௦௦௦௦௦௦௦௦) முப்பதுகோடி பவுணும் ஜப்பானியருக்குச் சீனர் கொடுக்க உடன்பட்டனர். அப்பணத்தொகையை மூன்றுவருடத்துக்கிடையில் கொடுத்துவிடின் வட்டியின்றிக் கொடுக்கிறதாயும், அதற்குமேற்பட்டால் ஏழுவருடத்துக்குள் நூற்றுக்கு ரு வீதம் வட்டிசேர்த்துக் கொடுப்பதாயும், இப் பணத்தின்பொருட்டு "போட்ஆதர்" என்னுங் கடற்றுறைநகரத்தை யப்பானியரே ஆண்டுகொள்வதாயும், அதிக வர்த்தக வளத்துக்கேதுவாகிய துறைநகரங்களாகிய சென்து, ஹைவேயாங்வ, பீகிங், ஷாங்கிங், கியூச் என்னும ஐந்துநகரங்களிலும் நூற்றுக்கு இரண்டுவீதமான வரிகொடுத்து ஏற்றுமதல் இறக்குமதல் செய்வதாயும், அவ்விடங்களில் வர்த்தககாரணமாகப் பல பண்டகசாலைகள் கட்டிக்கொள்வதாயும், உடன்படிக்கை உறுதிசெய்துகொண்டார்கள். இவைமாத்திரமன்று, இதுமுதல் தாமிருபகுதியாரும் எவ்விஷயத்திலும் ஒற்றுமையாகவே நடந்துகொள்வதாயும் எழுதிக்கொண்டார்களாம். இவர்களிங்ஙனே சமாதானமாக, சீனாவின் பிரபலமான இடங்களை ஜப்பானியருக்குக் கொடுத்ததைப்பற்றி, எப்போது கைப்பற்றுவேமெனக்காத்திருந்த ருஷியா, செர்மனி, பிராஞ்சு முதலிய அரசினர்களுக்கு அற்பமேனும் பிரியமில்லையாம். பர்மோசா தீவைக்கொடுத்தது அங்கிலேயருக்குப் பிரியமல்லவாம். இவ்வாறே இச்சமாதானம் ஏனைய இராசாங்கத்தாருக்குப் பிரியமற்றதாயிற்று. இச்சமாதானத்தைக்குறித்துச்சீன இராசதானியிலுள்ள சீனசேனவீரரும் பிரியமில்லாதவராய்க் கலகஞ்செய்கின்றார்களாம்,

இச்சமாதானம் நிலைபெற்று, சீனருக்கும் ஜப்பானியருக்கும் ஐக்கியமுண்டானபோதிலும், இச்சீனாவைக்குறித்து மறுஇராச்சியத்தார் சண்டைக்கு முஸ்தீது செய்வார்களென்று நம்புதற்குப் பல ஏதுக்களிருக்கின்றன.

### வைதிகசைவசுத்தாத்துவித

## சைவ சித்தாந்த சமயம்.

(௭௦-ம் பக்கத்தொடர்)

௩௩ பசுமவாதாவனி நூலுடையார் அபிப்பிரப

மீமாஞ்சா நியாயங்கொண்டு நிறுத்திய உண்மையினாலும், பிரமதர்க்கஸ்தவத்தினாலும், சிவமகிம கலிகாஸ்தநிக்கு ஸ்ரீ தியாகராஜ மகிராசர் இயற்றிய வியாக்கியையினாலும், சுவேதாசுவதரோபநிடதத்தும் முண்டகோபநிடதத்தும் முறையேகண்ட 'அத்தியாசிரமம்' 'சிரோவிரதம்' என்பன பாசுபத விரதத்தை உணர்த்தினவாமென்பதும் 'விரதம்' 'தீக்ஷை' என்பன ஒருபொருட் கிளவிகளாய் முற்றுமென்பதும் பெறப்பட்டு, கைத்திரியத்துப் 'பூதி' யும், முண்டகத்துச் 'சிரோவிரதமும்,' சுவேதாசுவதரத்து 'அத்தியாசிரமமும்,' காலாக்கி ருத்திரத்துச் 'சாம்பவமும்,' கைவல்லியத்து 'அத்தியாசிரமமும்' பாசுபத தீக்ஷையின் பாலனவேயாமென்பது கன்குவலியுறுத்தப்படும்.

௭௦ வேண்டியவரையிற் றனித்தனியாம் உபநிஷத தாற்பரியஞ் சுருக்கி உணர்த்தப்புகுந்த சூதசங்கிதைக் கண்ணதாம் பிரமகீதையானது பூதிபூண்ட ஐதரேய கைத்திரீயத்தை முதலாவதாகவும், அத்தியாசிரமமனைத்த சுவேதாசுவதரத்தை இறுதியதாகவுந் தொடங்கிமுடித்துக்காட்டும் எழுவாயுரை இறுவாயுரையாம் உபக்கிரமோபசங்கார லிங்கத்தினால் இருக்குவேதத்துக்குரிய ஐதரேய கைத்திரியம், சாமத்துக்குரிய சேசாசங்கேதக்கியம், அதர்வத்துக்குரிய முண்டகமாண்டூக்கிய பிரசினம், யசுருக்குரிய கைவல்யம், வாசசனேயத்துக்குரிய பிருகதாரணியம் ஈசாவாசியம், யசுருக்குரிய கடவல்லி சுவேதாசுவதரம் என்னும் உபநிடதங்கள் பாசுபத தீக்ஷையுடையார்க்குரிய பரமாத்வைத வைதிக சைவ பாசுபத உபநிடதங்களாமென்பது வெள்ளிடைமலைபோலவிளங்கக்கிடக்கின்றது.

எக விதிப்படி தரிக்கப்படும் பாசுபதவிரத விபூதி உத்தூளனமானது காலாக்கினி ருத்திரமே முண்டகம் கைத்ரீபம் கைவல்லியம் சுவேதாசுவதரம் அதர்வசிரசு பிருகச்சாபால முதலிய உபநிடதங்களிலும், போதாயனம் பாரத்துவாசம காரதீயம் லோகாக்ஷி கிரிபாசாரம் இரத்னாவளி தர்மசாரசுதாநிதி பாஸ்கரம் சாரசமுச்சயமுதலிய ஸ்மிருதிகளிலும், பாரதஞ் சிவரகசியம் இராமாயண முத்தரகாண்டம் என்னும் இதிகாசங்களிலும், சூதசங்கிதை பாராசரம் வாசிஷ்டலைங்கம் பிரமோத்தரகாண்டம் கூர்மம் மற்சம் மார்க்கண்டேயம் காருடம் பதுமம் மாநவம் லிங்கம் சனற்குமார சங்கிதை சௌரசங்கிதை சங்கரசங்கிதை காரதீயசங்கிதை சிவதர்ம சங்கிதை வாயவீய சங்கிதை முதலிய புராணங்களிலும் காலோத்தரஞ் சுப்பிரபேதமுதலிய ஆகமங்களிலும் பேசப்படுகின்றது.

௭௨ பிரசினோபநிடதத்து நான்காம் பாகத்து எட்டாவது மந்திரத்தினாலே அறியப்படும் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்து தூலபூதமும், சத்த பரிச ரூப ரச கந்தமென்னுஞ் சூக்குமபூத தன்மாத்திரை ஐந்தும், சோத்திரந் துவக்கு சட்சு சிங்குவை கிராணம் என்னும் ஞானேந்திரியமைந்தும், வாக்குப் பாதம் பாணி பாயுரு உபஸ்தம் என்னுங் கன்மேந்திரிய மைந்தும் மனம் புத்தி சித்தம் அகங்கார மென்னும் அந்தக்கரண நான்குமாம் இருபத்துநான்கு தத்துவமும் தூலப்பிரகிருதியவாமென்று யோகசூடாமணி உபநிடதத்தினால் உணரப்படும். இது ஆன்மதத்துவமெனப்படும். சுவேதாசுவதரோபநிடதத்து முதலாம் அத்தியாயத்து இரண்டாம் மந்திரத்தினாலே காலம் நியதி கலை வித்தை ராகம் புருஷன் மாயை என்னும் தத்துவங்கள் குறிக்கப்பட்டனவாமென்பதை உவப்பிரும் மனமாகக் கைலாசசங்கிதையின் ஒன்பதாம் அத்தியாயத்து இருபத்தொன்பதுமுதல் முப்பத்துமூன்றிறுதியாஞ் சுலோகங்கள் விரிக்குமிடத்து,

காலஸ்வபாவோநியதிரிச்ருதி:।

என்று அச்சுவேதாசுவதர மந்திரத்தொடக்கத்தை விதந்துகாட்டி விட்டமையால், அக்காலமுதலிய தத்துவங்கள் சர்வசாரோபநிடதத்துக்குஞ் சுவேதாசுவதரோப நிடதத்துக்கும் வேறுபடாத மூலப்பிரகிருதி எனப்படும் மாயையைப்பற்றி நின்றமையால் சூக்குமப் பிரகிருதியவாமென்று உணரப்படும். இது வித்தியா தத்துவமெனவும்படும். பிருகச்சாபாலோபநிடதத்திலே,

சிவஞ்சக்திஞ்சாதாக்யமீசம் வித்யாக்யமேவச।

'சிவஞ்சத்தி சாதாக்கியம் ஈசுரஞ் சுத்தவித்தை' என்று சொல்லப்பட்ட தத்துவமைந்தும் பரப்பிரகிருதியவாமென்று உணரப்படும். இது சிவதத்துவமாம். அதர்வசிகைமுதலிய உபநிடதங்களிலே பிரதிபாதிக்கப்படும் வியஷ்டிப்பிரணவ ரூபநாத முதலியவும் அச்சிவதத்துவங்களைப்பற்றியவாமென்பது சர்வசாஸ்திர சம்மதமாமென்க. எனவே ஆன்மதத்துவ இருபத்துநான்கும் வித்தியாதத்துவமேழும் சிவதத்துவமைந்துஞ் சேர்ந்து முப்பத்தாறெனமுடிந்த தத்துவங்களையே காரத பரிவிராசகோபநிடதம் ஷட்திரிமசத் தத்துவங்களென்று கூறியதாமென்க. இரத்தினத்திரயபரீக்ஷையுடையார் காரியப்பிரபஞ்ச மூன்றையும் முறையே மலினம் மிச்சிரம் சுத்தமெனறும் இம்மூவகைப்பிரபஞ்சத்துக்கும் காரணமானவற்றைப் பிரகிருதி, மாயை, மகாமாயை என்றும் கூறினர். (௫ ம் பிரிவிலே) காட்டப்பட்ட தத்துவ முப்பத்தாறுக்கும் வேறுறு நன்டு உபநிடதப் பிரமாணத்தோடு விரிக்கப்பட்ட தத்துவங்களினுண்மை பிரமாண்ட புராணத்து முப்பத்திரண்டாம் அத்தியாயம், அக்கினிபுராணம், ஆலாசிய மான்மியம், சிதம்பரமான்மியம், வாயுசங்கிதை, நீலகண்டபாஷ்யம், சிவதத்துவ விவேகவியாக்கியை முதலிய சமஸ்த சாஸ்திரங்களுக்கெல்லாம் உளப்பாடாமென்பதைக் கண்டுதெளிக.

ப்ரக்ருதிஸ்த்ரேதாஸ்தூலா சூக்குமாபரேத்யசோ। மகாமாயாபவேத்ரிதாத்ரஸ்தூலாகுணாத்மிகா। புத்யாதிபோக்யஜநீப்ரக்ருதி: புருஷஸ்யஸ।। சூக்குமா கலாதிதத்வாநாமவிபாகஸ்வரூபிணீ।

'பிரகிருதியானது ஸ்தூலம் சூக்குமம் பரமென மூவகைப்படும். ஸ்தூலப்பிரகிருதியானது புருஷனுக்கு (பசுவுக்கு) முக்குணத்தோடியன்ற புத்திமுதலிய போக்கிய கருவிகளைப் பிறப்பிப்பதாமென்றும், சூக்குமப் பிரகிருதியானது கலாதித்தத்துவங்களின் பிரிவிலாச் சொரூபமுடையதென்றும், பரப்பிரகிருதியானது மகாமாயையாம் விந்துமயமாம்'என்றும் சிவாகமஞ் செப்பியவாறும் இயைத்துணர்க. பிருதிவிமுதற் சிவதத்துவமீறுகச் சொல்லப்பட்ட தத்துவ முப்பத்தாறனுள்ளே, பிருதிவி தத்துவம் நிவிர்த்திகலையிலும், அப்புமுதலிய தத்துவம் இருபத்துமூன்றும் பிரதிஷ்டாகலையிலும்' வித்தியாதத்துவங்களேழும் வித்தியாகலையிலும், சுத்தவித்தைமுதலிய மூன்றுஞ் சாந்திகலையிலும், சத்திதத்துவமுதலிய இரண்டும் சாந்தியாதீதகலையிலுமாக அமைவனவாம்.

## சமாசாரம்.

**காலநிலை;**—மழை, பெய்வதுபோலப் பாசாங்கு செய்துவிட்டுத் தொலைந்தது. வெயிலும் புழுக்கமுமதிகம், சிறுதென்றலவீசுகின்றது.

**புகையிலை!**—இத்தோட்டக்காரர், கன்றுகளை வெட்டியும், பாகப்படுத்தியும், விற்றும், விலைபேசியும வருகின்றார்கள். கன்றுக்குத்தகையாக வாங்கிப் பாகப்படுத்தி விற்கும் ஒருசாராரும் திரிகின்றார்கள்.

**வைத்திஸ்வரன்கோயிற்கழஞ்சியவீடு:**—ஆனைக்கோட்டை உடையாரவர்களது விடாமுயற்சியால் இதன் முற்கட்டு வேலைமுடிந்தது. பிற்கட்டுவேலை தருமசிலருதவியிருந்தாற்றான் சீக்கிரம் முடியும். உடையாருடையமனம்,வருஷத்தில் ௩௰, ௪௦௦ ரூபா வரும்படி வரக்கூடியதாக விருக்கிற கறப்பிகிட்டங்கியென்னு மிக்கோயிற் கிட்டங்கியைப் பழுதுபார்ப்பிக்கவே விருப்புறுகின்றது. சங்கர்மடம் ஸ்ரீ, இ. வேலுப்பிள்ளை கோயிலுக்காக கட்டி வைத்திருக்கும் பொருளிலொருபகுதியை இக்கட்டடவேலைக்கு உதவுவாராயின் பெரும்புண்ணியமே.

**இதுவுஞ்சட்டமா.**—சுத்தோலிக்குக்கிறிஸ்வர் இப்பொழுது விவாக கட்டளைச்சட்டத்தில் சில திருத்தஞ்சேட்டிருக்கின்றார்களாம். அவைகளுள் "பிராமணத்திற் றவறும் குருமாருக்கு ஆக்கினையிடப்படுஞ் சட்டம் செய்யப்படாது" என்பது ஒன்றாம்.

**விவாகப்பதிவுச்சட்டம்:**—எங்கள் தமிழ்ப்பிரதிநிதி ஸ்ரீ குமாரசுவாமிமுதலியார் மதாசாரத்திற் கிடையூறுயுள்ள சிலபகுதிகளை நீக்கவேண்டுமெனறு சட்டநிரூபணசபையிற் கேட்டிருக்கிறாராம.

**கவிகள்:**—வல்லை ஸ்ரீ திருவேங்கடாசலப்பிள்ளையின்தேகவியோகத்தைக்குறித்து உடுப்பிட்டி ஸ்ரீ அ. சிவசம்புப்புலவர் சொல்லியகவிகள். அவரதுகுணவிசேடங்களை நன்குவிளக்குகின்றன, இக்கவிகளடங்கிய புத்தகமொன்று நமக்குவர மகிழ்வுடனேற்றுக் கொண்டேம்.

"சைவாநுஷ்டானக்கிரியாவிதி" இப்பெயரியபுத்தகமொன்று நாத்தாக்குட "சைவசித்தாந்தசபை"யாரால் அகோரசிவாசாரிய பத்ததி, சகலாகமசாரசங்கிரகமுதலியபல நூல்களிலுள்ள அநுஷ்டானக்கிரியையைத்தழுவி எழிய தமிழ்வசனநடையிலியற்றி, அதனோடுமகாவித்துவான் ஸ்ரீமீநாட்சிசுந்தரம்பிள்ளை பாடியமாயூரபுராணத்திலுள்ள "அநுட்டான விதிப்படலச் செய்யுள் ௭௰ம் சேர்த்து அச்சிட்டபிரதியொன்றை நமக்கனுப்பியதற்காக நன்றிகூறுகின்றேம், இதன்விலை தபாற்செலவுடன் சதம் ௨௨. விரும்பியவர்கள் ஷை சபையாருக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**கல்கத்தா F. A. பரீக்ஷை:**—இப் பரீக்ஷைக்கு இவ்வருடம் வட்டுக்கோட்டைக் கல்லூரியிலிருந்து ௨௧ பேர் சென்றார்கள். அவர்களுள் ௨ ம் வகுப்பில் ஐந்துபேரும், ௩ ம் வகுப்பில் ஒன்பதுபேருமாக ௧௪ பேர் சித்திபெற்றார்கள். இவர்களுள் சிலரொழிந்த ஏனையோர் அக்கல்லூரியின் பழயமாணவர்களே. சித்திபெற்றோரெவரையும நமக்குத் தெரியாதிருப்பினும், பன்னாலை ஸ்ரீ. ச. கனகசபைப்பிள்ளையவர்கள் புத்திரர் மாணிக்கத்தியாகேசர் ௨-ம் வகுப்பில் சித்திபெற்றார். சென்றதற்கு முந்தியவருஷத்தில் இந்துஹைஸ்கூலில் பிரவேசப்பரீக்ஷையிற் சித்திபெற்ற மாணவருளொருவராகிய ஸ்ரீ எஸ். வைத்தியலிங்கமென்பவரும் ௨ம் வகுப்பில் சித்திபெற்றவருளொருவர்.

**துறவிச்சாமி:**—இல்லறவாழ்வைத்துறந்துமோக்ஷவாசற் றிறவுகோலை வைத்திருக்கும் ஒரு சாமியார் ஒரு ஏழைப்பெண்ணின் கற்பைப்பக்கவர்ந்ததினால், அவள்சாமியின்வார்த்தையைத் தட்டக்கூடாததினாலுண்டாய சூலையன்றி "சூலை" யல்லவென்று கேட்போரெவர்க்குஞ் சொல்லுகின்றாள்.

**சாதிச்சண்டை:**—மாதகலிலே கத்தோலிக்குக்கரையார் சித்திரை மீ ௧௨௨ வந்தசுபமுகூர்த்தத்திலே விவாகத்துக்கு முகூர்த்தம்வைத்து கைப்பிடிப்பதற்குப் போகும்பொழுது மேளவாத்தியங்களுடன் போகயத்தனித்ததை அறிந்த அவர்களது குருவுங் கைப்பிடியேனென மறுக்க, வேளாளரும் மேளகாரருக்குத்தக்க புத்திசொல்லித் தடுக்க அதனால் அன்று விவாகமகிழ்வைப் பார்க்கக்காத்திருந்தபலர் இலவுகாத்த கிளிகள்போல மனத்துயரடைந்தார்களாம், முன்முறைகளிற் கரையார் பட்ட பாட்டையுங் கேட்டையும் கைக்கூலிபெறவிரும்பிய இரண்டொரு அதிகாரிகளே மறப்பித்துவிட்டார்களாம்.

**றெயில்:**—தினந்தோறும் ௧௪௦௦ புகைரதவண்டித் தொடர்கள் வாத்துப்போக்காயிருக்கினற பெரியடேசன் இங்கிலாந்திலுள்ள கிளம்பா என்னும் ஜங்ஷன் ஒன்றே.

**திருவாரூர்த்தேர்:**—ஸ்ரீ வீதிவிடங்கத் தியாகராசசுவாமி பங்குனி உத்தரத்தன்று மகாரதமேற, அவர்மீது அன்புமிகுந்த பக்தர்கள் விடாமுயற்சியோடு வடந்தொட்டிழுக்க மறுநாள் ரதம் நிலைவந்துசேர்ந்தது. வாரக்கணக்காயும், மாசக்கணக்காயும் ரதம் வீதியில் கிடப்பதை விட்டு இவ்வருடமே மறுநாள் நிலைக்குவந்தது.) இதுமகாஆச்சரியமே.

**இந்தியகல்வி:**—இந்தியாவின் குடிசனத்தொகை ௨௮,௨௦,௦௦௦௦௦. இதில், ௧௨௦௦௦௦௦௦ சனங்கள்மாத்திரமே எழுதவாசிக்கக் கூடியதாய்ப் படித்தவர்களாம்.

**சித்ரால்யுத்தம்**—இங்கே யுத்தமும் யுத்தயத்தனமும்நடக்கிறதாகவந்திருமை: உம்ராகானுக்குப் பிரிட்டிஸ்அரசினர்செய்த பகிரங்க அறிக்கை (Proclamation) பயன்படவில்லை. சிம்லாவிலிருந்து ஏப்றில்மீ ௭ம் ௮ந் திகதிகளில் வந்ததந்திப்படி உம்ராகான்பக்கச் சேனையில் ௧௦,௦௦௦ பேர் மாண்டார்களென்றும், உம்ராகானின்கோட்டையாகிய தாருஷைப் பிரிட்டிஷ் சேனைகைப்பற்றிக்கொண்டதென்றும்,யுத்தயத்தனங்களதிகமாகநடக்கிறதென்றும் தெரியவருகிறது.இப்போது உம்ராகான் ஒளித்தோடினரென்பது பிந்தியதந்தி.

**நீமோசயம்:**—காஞ்சிபுரத்தைச்சார்ந்த தேனம்பாக்கத்திலே மூன்றுமாதகாலமாக அடிக்கடி வீடுகளிலும் வைக்கோற்போர்களிலும் தீப்பற்றியெரிந்துவருவதினால் அநேகநஷ்டங்களுண்டாயினவாம தேவதையின் கூறென்கிறார்கள்.

**வேதபாடசாலை:**—காஞ்சிபுரத்திலே ஒருவேதபாடசாலை ஸ்தாபிப்பதற்காக நாட்டுக்கோட்டைச்செட்டிமார் ௬௫௦௦ ரூபாவுக்குஒருகட்டடமவாங்கினார்கள். அதற்கு ௭௦,௦௦௦ ரூபா மூலதனமாகக் கட்டப்போகின்றார்கள். தேவாலயதிருப்பணியொன்றே விசேடமென இவர்கள்மனதில் நெடுங்காலம பதிந்திருந்து இப்பொழுது அத்தோடு வித்தியாவிருத்தியும் விசேஷதருமமென அறிந்து நடாத்திவருகின்றார்கள்.

**அக்கினி! அக்கினி!**—இரங்கூனிலே ௬௫௨ வீடுகளையும்;பெருந்தொகைநெல்லையும் பலசாமான்களையும் சிறு மணித்தியாலங்களுக்குள் பட்சித்து விட்டதாம்.

**இரங்கூன். ஸ்ரீ-மதுரைப்பிள்ளையின் டவுன்பாடசாலை:**— ஷை பிள்ளையவர்கள் சிலவருடங்களுக்குமுன் இப்பெயரியவித்தியாசாலை ஒன்று ஸ்தாபித்து நடத்துகின்றார்களென்று பத்திரிகைகளாலறிந்தேம. இப்பொழுது அதன்பரீக்ஷையில் மாணவரடைந்திருக்கும் திறமையை இஸ்பெக்டர் செய்திருக்கும் றிப்போட்டால் அறிந்து சந்தோஷமாற்றேம். 'ஓமயம் ஜிரவிக்கு [illegible] ...ருந்மதானை. [illegible] ...லயட்டம வித்தியாசாலைகளை ஸ்தாபித்தும் இவ்விதகீர்த்தியைப்பெறாது வித்தியாசாலைகளை நடாத்துவதினால் பெறும்பேறென்னே! மானேசர்கள் சிந்திப்பார்களாக.

**சிதம்பர ஆலயக்குழப்பம்**—சிதம்பரத்திலே ஸ்ரீகோவிந்த ராஜப்பெருமாள் சந்நிதிக்கெதிரே, நாட்டுக்கோட்டையார் ஒருமண்டபங்கட்ட யத்தனித்தார்கள்; அந்தஇடத்தில் மண்டபங்கட்டினால் ஷை பெருமாள் கோயிலின் பார்வைகெட்டுப்போமென அக்கோயிலார் பிராதுசெய்தார்கள். அதுசமயத்தில் சிதம்பரம்வந்திருந்த கலெக்டர் இதை அறிந்து இருகட்சிக்காரரையுமழைத்து வீணேகோட்டுக்குப் பணமிறைக்கவேண்டாம தக்கமனுஷரைமத்தியஸ்தராகவைத்து வியாச்சியத்தைத் தீர்த்துகொள்ளுமாறு சற்புத்திகூற, இருகட்சியாரும் அதை ஒப்புக்கொண்டு மத்தியஸ்தர்பொறுப்பில் விடப்போகின்றார்களாம், இதுவன்றோ நல்லோர்க்கழகு.

**வெற்றிலைக்கும்வரியாம்:**—தென்னார்க்காட்டிலே இறக்குமதலாகும் வெற்றிலைக்கு வரிவிதித்துவிட்டார்களாம். இன்னுஞ்சிலநாளில் உண்கிறசோற்றுக்கும் வரிவிதியாதவிடார்களென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

**கொழும்பு:**—நன்மழைபெய்து வெப்பம் சாந்தியாயிருப்பதோடு நோய்களுங்குறைந்து அரிசிவிலையுமிறங்கியதாம்.

**குன்றக்குடி:**—கலியுகவரதராகிய சிவசுப்பிரமணியக்கடவுள் எழுந்தருளியிருந்து அடியார்களுக்கனுக்கிரகஞ்செய்யும் இத்தலத்திலே சென்றபங்குனிமாசத்திலே மகோற்சவம்நடந்து சடைத்தினமாகிய உத்தரத்தன்று தரிசனத்துக்குவந்த பக்தர்கள் ௫௦,௦௦௦க்குமேலாம். இம்மட்டா அன்றுவந்தபாற்காவடி ௬௪௨ சர்க்கரைக்காவடி ௩௫௮. தேன்காவடி ௧௪௩ இவைமட்டா அக்கினிக்காவடியும் ௫ வந்ததாம். இக்காவடிகளைக் கொண்டுவந்தவர்கள் சலங்கைகட்டிக் கூத்தாடவுமில்லை, மேளகாரருக்குப் பெருந்தொகைப் பணங் கொடுக்கவுமில்லை பக்தியோடு தோள்ற்காவடியைவைத்து அதிற்கட்டியிருந்த அபிஷேக திரவியத்தைச் சாமிசந்நிதி கொண்டுபோய்ச் சேர்த்தேவிட்டார்களாம்.

**ஜப்பானியசக்கிரவர்த்தி;**—சீனருடன்சமாதான உடன்படிக்கை செய்துகொண்டபின்னர், காமிரு இராச்சியத்தாரும் ஐக்கியமாக விருக்கவேண்டுமென்றும், உடன்படிக்கை நிறைவேறியவுடன் ஜப்பானிய பிரசைகளைச் சீனப்பிரசைகளோடு ஐக்கியப்படுத்தவேண்டுமென்றும், ஐக்கியத்தைகுறித்த வேறுபல ஒழுங்குகள் தங்களுளளே செய்துகொள்ளவேண்டுமெனறும் தமதுமனக்குறிப்பை வெளியிட்டிருக்கிறாராம்.

**சோம்பேறிகள்செய்கை.**—யாது தொழிலுஞ் செய்ய மனம்பொருந்தாத சில சோம்பேறிகள் ஒருவரிடத்து ௧௦, ௨௦ ரூபா சம்பளம்பெற்றுச் சேவிப்பது அவமானமெனகொண்டு, இரந்து சீவிப்பதிலேயே தங்காலத்தைக் கழிக்கின்றார்கள். இத்தன்மையோர் செதைச் செய்யினும், நாம்சொல்வதாவதியகமல்லவாயினும், இவர்கள், மனவிசுவாசததோடு தருமஞ்செய்யவென்று பணத்தைசட்டி வைத்திருக்கும் நாட்டுக்கோட்டையாரை அணுப்பி அவர்கள்பொருளை அபகரித்து வருவதினாற் சொல்லவந்தேம். இப்பொழுதுமிங்கிருந்து சிலர் நாட்டுக்கோட்டையாரை வஞ்சிக்கச்சென்றிருக்கின்றார்களாம். சிவதருமத்துக்கென்ற அவர்கள்வைத்திருக்கும் பணத்தைக்கவர நினைப்பவர் சிவத்திரவியத்தைக் கவர்ந்தபாவத்தைத் தப்பாதடைவர்.

செட்டிமார்களே,

நீங்கள் புண்ணியவசத்தாற் புண்ணியஞ்செய்ய ஈட்டிவைத்திருக்கும் புண்ணியப்பொருளைப் பாத்திரமறிந்து கொடுத்துப் புண்ணியத்தைத்தேடிவிர்களாக.

obtained leave of absence for ten days to recruit his health which has become of late very unsatisfactory. Mr C. Muttucumaru, the young, energetic and affable relieving Postmaster, has come down from Colombo and relieved him. Mr Muttucumaru is the son-in-law of the late Mr Samuel Ñevins Pillai, the eldest brother of the popular Head Master of the Hindu High School, Mr. Chelvaduraipillai.

It is worthy of note that this young officer, in his own sphere of work as relieving P M, whereever he went and did duty, gave satisfaction and won the esteem and regards of the public, as the demonstration that took place in Rakwana where he had been a short time would testify, he being presented with a valedictory address and a purse, and entertained at a dinner prior to his departure, by the leading men of the place. —*Cor.*

(Mr. Silva has recovered and resumed dutie^s^ we are glad to say Ed H. O.)

The Government Agent—Mr. Twynam returned here from Colombo via Mannar and Delft on the 29th Ultimo. He has not yet attended office, owing, we are sorry to learn, to slight indisposition.

Delft Horses—Thirty of these animals have been caught and brought to Jaffna, by order of the Government Agent. They will be sold on the 10th Instant.

The Point Pedro and ChavakachcheriCourts—The appointment of Mr Advocate Ñagalingam as acting Police Magistrate of these Courts for one month, during the absence of Mr. Casie Chitty on leave, has been Gazetted. Mr. Nagalingam assumed duties on the 1st Instant.

Railway Probationers Examination—An examination for the admission of probationers for the Railway service will be held at the Colombo School of Agriculture on May 20 and 21, commencing at 11 A. M. Shorthand-writing is made one of the subjects of Examination. Candidates not already in the Railway Service must be between the a.es of 18 and 25 on May 20, and this should be proved by certificates of the Registration of their birth and not by affidavits. A goodly number of Jaffna young men have already proceeded from here to Colombo to present themselves for the Examination.

We are at a loss to know why this Examination should be held in Colombo alone and not simultaneously in the chief towns of the other Provinces also, as is done in the case of the Clerical Examination. We also fail to see the utility of shorthand-writing in the Railway Service any more than in the Clerical Service under Government, except perhaps as a means of restricting the choice of candidates for the Examination.

Tobacco—The outturn of this staple product of the Peninsula is considered to be above the average this year. The leaves are now being cut and cured, and the merchants will commence their purchase by the end of this month Last year the Jaffna Tobacco fetched the highest price known for several years both here as well as in Travancore. The price of a Candy of tobacco of the best sort was in Jaffna last year as high as Rs 250 But, owing to a good crop here, and the large stock remaining in Travancore and Cochin, it is expected that the same sort will not fetch this year oven Rs 200 per Candy.

P. W. D —An exchange of duties has been sanctioned by Government between Mr. A Kathiravalu, District Engineer's Clerk, Pallai, and Mr. C. Thambiah, District Engineer's Clerk, Jaffna.

Calcutta F. A. Examinotion—Out of 21 students presented from the Jaffna College 14 have passed this Examination, among whom we are glad to find the names of Manika Thiagesar, son of Mr. S. Kanagasabai of Pannalai and brother-in-law of Mr. Advocate Kanagasabai; and S. Vytialingam who passed the Entrance Examination in 1893 in the first class from the Hindu High School.

Araly—The people of this place are to be congratulated on the establishment of A Saivite School here by Mr. A. Ramalingapillai, a respectable and liberal minded gentleman of the place. The school supplies a real want, as most of the parents who have been hitherto sending their children to the Mission school of the place have now withdraw them and send them to the new Saivite School.—Cor.

Obituary—We deeply regret to have to record the death of Mrs Thorpe, wife of Mr. W. E. Thorpe, the Office Assistant to the Government Agent N P. She had been suffering from consumption, and Mr. Thorpe secured his transfer to Jaffna in the hope that the climate of this District would prove beneficial to her health. But she succumbed to the disease on the morning of the 27th Ultimo. We offer to Mr. Thorpe our since sympathy.

The Speakership of the House of Commons—Mr Gully Q. C. M. P. has been elected Speaker by a majority of eleven votes in the place of Mr (now Lord) Arthur Peel who has resigned.

The London Corrrespondent of the Amrita Bazar Patrika writes as follows of the new Speaker:—

Mr. Gully is a striking instance of the social possibilities of a democratic country, and how little a man's ancestry stands in his way if he himself is a man of capacity. Mr. Gully's grandfather was a well-known prize-fighter in the time of George the Fourth, his father was a medical pracitioner, and he himself is now "the First Commoner of England." He was educated at Cambrige University, was called to the bar in 1860, was made Queen's Counsel in 1877, succeeded Sir Charles Russell as leader of the Northern Circuit in 1892 and would have been the next judge, had he not been elected Speaker. I had known the new Speaker for many years before he entered the House at all. I believe he has all the qualifications for the high and distinguished position to which he has been called, and that its dignity and honour will be well maintainted by him.

## TBE ATTORENY-GENERAL.

The Hon. C. P Layard, Attorney-General, having returned from his trip to England, relieves Mr, Ramanathan who has been acting for him and who is likely to go on three months' privilege leave to India before resuming his duties as Solicitor-General. We extend a very cordial welcome to Mr. Layard.— Observer.

## CALCUTTA ENTARANCE EXAMINATION.

The following names of passed candidates from Ceylon are taken from the *Calcutta Gazette* The figures indicate the age of each.—

FIRST DIVISION.

| | | |
|---|---|---|
| C Perumalpillai ... | 19 | Jaffna Hindu H School |
| K. Chelliah ... | 18 | do |
| S. Appaduray ... | 15 | Jaffna College |
| De Alwis, E A ... | 16 | Trinity College Kandy |
| Perera, R A ... | 16 | Trinity College, Kandy |

SECOND DIVISION

| | | |
|---|---|---|
| Abraham E S ... | 17 | Jaffna College |
| M Thillyampalam ... | 18 | do |
| N. Sellappa ... | 20 | do |
| S. Kanakasabai ... | 17 | do |
| S. Selvadurary ... | 19 | do |
| V Ampalvanar ... | 17 | do |
| K. Chupramaniam | 20 | Jaffna Hindu H School |
| N. Sapapathy ... | 18 | do |
| S P Saravanamuttu | 19 | do |
| S. Veeravagu ... | 19 | do |
| Chinnakutty, C. A | 18 | St. John's College Jaffna |
| D A A. Wickremasinghe | 17 | S.Thos, Col Colom |
| Pereira, P ... | 17 | Trinity College, Kandy |
| T. N. Valupillay ... | 18 | Trinity College Kandy |
| Rasanayagam, S D | 24 | Batt. W. C Institution |

THIRD DIVISION.

| | | |
|---|---|---|
| A. Chellappah ... | 19 | Jaffna College |
| C Duriappah ... | 16 | do |
| C. W. Palasingham | 16 | do |
| John W. ... | 20 | do |
| Josephs J H R ... | 18 | do |
| K Culantaivallo ... | 20 | do |
| Mather E ... | 18 | do |
| R Dharmalingam | 16 | do |
| Richards S ... | 17 | do |
| S. Kanagratnam | 18 | do |
| T. S. Sinatamby... | 29 | do |
| V. Sangarapillai... | 16 | do |
| Mann J R. ... | 17 | Jaffna Hindu H School |
| P Thampiturai ... | 18 | do |
| S. Sithamparapillai | 19 | do |
| V. Visuvalingam ... | 19 | do |
| A. E Moreira ... | 19 | Trinity College Kandy |
| Cooray, J H ... | 18 | S. Thos. Coll. Colombo |
| Coorey, I. ... | 19 | P, of W. Coll., Colombo |
| Corea, J A ... | 19 | Wes College Colombo |
| De Silva G ... | 17 | Rich College Galle |
| E, J. Ratnasingam | 19 | Teacher, Jaffna |
| Fernando L J ... | 17 | Trinty college Kandy |
| do P, c ... | 16 | P of W Coll, Morotuwa |
| G. E Madawelá ... | 17 | St Thos' Coll, colombo, |
| Herft L E ... | 18 | Trinity college, Kandy |
| J A Shetukavalan ... | 17 | Batt W C Institution |
| Jaywickreme H A | 18 | Trinity Col: Kandy |
| Leitch G S ... | 18 | Rich College, Galle |
| Loos A A ... | 18 | City school colombo |
| Schokman P A ... | 17 | Trin college Kandy |
| Strong W S ... | 16 | Trin college Kandy |

## EXTRACT.

### MR. GLADSTONE IN RETIREMENT. STUDIES IN THE LIFE OF AN OCTOGENARIAN.

(The Westminster Gazette.)

To-day Mr. and Mrs. Gladstone leave London for Hawarden Castle, where, after a short visit to the Dean of Lincoln, their son-in-law, they will arrive on Monday next. At the end of an exceptionally successful holiday of several months, Mr. Gladstone returns to his home in better health and spirits than he has enjoyed for over a year. He is as full of energy, as keenly alive to all the questions and interests of the day, as he has ever been before. It will, therefore, be interesting at this point to trace the daily life of the octogenarian, who, as he himself often humorously remarks, is very much indeed on the shelf. This we propose to do in a short series of articles, of which the present is the first instalment.

Few and far between are the men who have lived up to their principles concerning the division of life as entirely as Mr. Gladstone. It has always been one of his principles that an old man should pass the last years of his life in the pursuit of something more solemn than party politics. The idea jarred on him years ago that on the threshold of another life a man should still spend his days in polilical strife, and though he was by no means blind to fine points of the man who died in harness, who fought till he fell, he had long ago made another plan for his own old age.

Thus, when the opportunity arose and he considered himself justified in retiring from the fight, he put his life long principle into practice with the same firmness with which, years ago, he practised that other great principle of his, according to which no man has the right to die rich. It will be remembered that, at that time, he divided his possessions among his children giving every acre of land to his eldest son, and to his other sons and daughters each his or her portion. Since then Mr. Gladstone looks upon himself not as the master of Hawarden, but as a lodger who is permitted to spend the rest of his life among his old surroundings.

When, therefore, more than a year ago, he suddenly retired from public into the strictest private lfe, and when everybody was mildly pitying him because "he must find things so deadly dull," Mr. Gladstone, as a matter of fact, was entering upon what has now proved to be one of the happiest periods of his life. He had countless interests to which he had never yet had sufficient time to devote himself; and without delay, without looking back, he plunged into them, as happy as a child, and became completely absorbed in his literary, classical, and theological pursuits. At that time the operation for cataract was to be performed, and Mr. Gladstone was obliged to be very careful in using his eyes. Also, an attack of influenza weakened him somewhat, especially as it left behind a slight internal weakness necessitating a certain amount of lying up every day, up to the time of journey to the South of France, from which Mr. Gladstone has just returned, completely cured even of this slight indisposition. The operation on the eye, as everybody knows, was very successfulyl performed, but at Christmas he had an accident at Hawarden which filled those about him at firt with the gravest anxiety. Authentic details regarding this fall have not reached the public hitherto, but the present account will show both the gravity of it and also Mr. Gladstone's truly marvellous power of recuperation. He was sitting alone in his library one evening, with no one near him in that part of the house where "the temple of peace" is situated. Mr. Gladstone had been sitting at his desk reading, and got up, one hand full of books, and carrying a candle in the other hand, in order to look for some book he required from another part of the room. Getting up, he forgot that he had left the lowest drawer of his writing table open, stumbled over it, and fell headlong on the floor. Both hands being occupied, he could not protect himself, and fell with his forehead on the parquet floor. Instead of calling for assistance he tried to get up, and it was only quite by chance that one of his daughters entered the room just then. He told her what had happened, but made light of it. Both his shins were cut, his forehead had received a terrible blow, and he was badly shaken. At dinner, an hour after, he discussed Hegel in a most animated manner, then went to bed, and slept "like a top." Next morning, however, on getting up, he complained that he could not see properly, and during service at church, instead of following the lessons in his prayer book, he sat still with closed eyes. On coming home he was advised professionally to go to bed; this he did, in the middle of the day, and next morning it was found that he was perfectly restored. His shins were healing like a healthy child's, his sight was as good as usual, and the effect of the shock had passed off completely.

The holiday in the South of France, it was hoped, would remove the last little weakness which ten months ago the influenza had left behind. It had obliged Mr. Gladstone to take his breakfas in bed, at 8-30. But staying in bed to that "late" hour did net mean sleeping. For even before the breakfast arrived Mr. Gladstone was absorbed in a book, and very soon after breakfast he was up and about, to read or write till luncheon-time. This wus also the period when he was obliged to leave off attending morning prayers together with Mrs. Gladstone at the village church, about a mile from Hawarden Castle. To the distress of their friends, neither Mr. nor Mrs Gladstone would ever if a cup of tea was unexpectedly sprung upon them by anxious friends it was but very rarely that Mr. Gladstone could be persuaded to take it, while Mrs Gladstone never broke her rule of taking nothing before going to church. Very occasionally, of late: Mr. Gladstone, before entering church, has gone into the rectory to ask for a cup of coffee from the eight o'clock breakfact table.

Notwithstanding this activity, Mr. Gladstone was obliged, up to the time of his going abroad last January, to conform in some slight degree to the doctor's request that he should be very careful. He had to lie down after luncheon for an hour or two, and retain a reclining position as much as possible. But with his arrival in the South of France a new regime began. The convalescence was over; every moment of the day—including that devoted to a midday nap—was most carefully mapped out. The G. O. M. got up with a perfectly clear idea as to what he meant to do that day between nine-o'clock breakfast and the time when, after an absorbingly interesting game at backgammon, he read family prayers, by the light of one candle at 10 p. m. How Mr. Gladstone mapped out his "fair day's work" during his recent holiday, we propose to set forth in our second article which will be published to-morrow.

☞ PRINTED AND PUBLISHED BY V. CHUPPIRAMANIA PILLAI FOR THE PROPRIETOR AT THE SAIVAPRAKASA YANTRA OFFICE JAFFNA.